நாள் 14.12.2022

அசல் வழக்கு எண் 29/2020

வாசா.1 - முருகேசன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஓய்வு பெற்ற அரசு ஊழியர். நான் ஓய்வு பெற்ற மாதத்தில் வாங்கிய மொத்த சம்பளம் ரூ.49,658/-. எனக்கு 2 வங்கிகளில் கணக்கு இருக்கிறது. பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 14.05.2018 தேதியில் 2 வங்கி கணக்குகளிலும் தங்களுக்கு எவ்வளவு பணம் இருந்தது என்றால் minimum தொகை ரூ.1000,2000 என இருந்து இருக்கும். நான் ஒரு Income tax assessee அதனை எனது சம்பளத்திலேயே பிடித்தம் செய்து கொள்வார்கள். தாவா கடன் தொகையை ஐட யில் காட்டியிருக்கிறீர்களா என்றால் பணி ஓய்விற்கு பின்னர் Income Tax கட்டும் அளவிற்கு ஓய்வூதியம் இல்லை என்பதாலும் தாவா கடன் எனது பணி ஓய்விற்கு பின்னர் கொடுக்கப்பட்டதாலும் Income Tax ல் காட்டவில்லை. தாவா தொகை வருமான வரி கட்டும் அளவிற்கான தொகை என்றால் சரிதான். ஆனால் அந்த தொகை எனக்கு பணிக்கொடை, commutation, Surrender Leave, Sepcial PF, GPF, ஆகியவற்றில் கிடைத்த தொகைகளை கொண்டு தாவா கடன் கொடுக்கப்பட்டதால் அவைகளுக்கு வருமான வரி வராது. எனது பணி ஓய்வு பண பலன்கள் எனது வங்கி கணக்கில் தான் கிரெடிட் ஆகும். மேற்கூறிய பணி ஓய்வு பலன்கள் எந்த தேதியில் வங்கி கணக்கில் கிரெடிட் செய்யப்பட்டது என்றால் வங்கி பாஸ் புத்தகத்தை பார்த்தால்தான் தெரியும். எனக்கு பென்சன் மற்றும் பணி ஓய்வு பலன்களை தவிர வேறு தொகையில் வருமானம் தங்களுக்கு உண்டா என்றால் எனது பணி ஓய்வு பலன்களை வைத்து வேறு பிசினஸ் செய்கிறேன். எனது மகன் வெளிநாட்டில் இருந்து பணம் சம்பாதித்துஅனுப்புகிறார். நான் வேறு பிசினஸ் எதுவும் செய்யவில்லை என்றும் எனது மகனும் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பவில்லை என்றும் சொல்வது சரியல்ல. எனது பிசினஸ் மூலமும், மகன் மூலமும் எனக்கு பணம் வந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா கடன் தொகையை நான்எனது வங்கி கணக்கில் இருந்துஎடுத்துக் கொடுக்கவில்லை. கையில் இருந்து கொடுத்தேன். பிரதிவாதி எனக்கு வட்டிக் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் பிரதிவாதியும் கேட்கவில்லை நானும் கொடுக்கவில்லை. நான் பணியில் இருந்த போது லஞ்ச ஒழிப்பு துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம் அது தள்ளுபடியாகிவிட்டது. நானோ எனது மனைவியோ வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்கிறீர்களா

என்றால் இல்லை. இந்த வழக்கில் சொல்லப்படும் தொகைக்காக மயிலாடுதுறை விரைவு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஒரு காசோலை மோசடி வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்தீர்களா என்றால் ஆமாம். பிரதிவாதியும் அவரது ஒன்றுவிட்ட சகோதரி வசந்தி மற்றும் அவரது கணவர் செந்தில் ஆகியோர் ஒரே வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்பது சரிதான். மேற்படி செந்தில் 04.04.2017 ல் ரூ. 7 லட்சமும், 10.05.2018 ல் மேற்படி வசந்தி ரூ.5 லட்சமும் இந்த பிரதிவாதி ரூ.11 லட்சம் 14.05.2018 ல் கடன் வாங்கியதாகவும் மேற்படி மூவருக்கும் எதிராக விரைவு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனித்தனியாக 3 வழக்குகள் காசோலை மோசடி அடிப்படையில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 3 வழக்குகளும் நாளது தேதியில் நிலுவையில் இருந்து வருகிறது. வாசாஆ 1 கடன் பத்திரத்தை ஸ்ரீதர் என்பவர் எழுதினார். அவர் அதில் ஒரு சாட்சியாக இருக்கிறார். வாசாஆ 1ல் உள்ள பூர்த்தி செய்யப்பட்ட பகுதியும் கையெழுத்து செய்யப்பட்டுள்ள பகுதியும் வேறு வேறு மையினால் எழுதப்பட்டிருப்பதாக சொல்வது சரிதான். பிரதிவாதி தன் வசம் இருந்த பேனாவால் ஸ்டாம்பில் கையெழுத்து செய்தார் என்று சாட்சி தாமாக கூறுகிறார். மேற்படி செந்தில் மற்றும் வசந்தி ஆகியோர் என்னிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாமல் இருந்து வருவதாக சொல்லப்படும் நிலையில் அதே வீட்டில் குடியிருக்கும் பிரதிவாதியிடம் நான் கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 2017-18 ம் ஆண்டில் மேற்படி மூவருக்கும் சேர்த்து ரூ.23- லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. எனது பணி ஓய்வில் கிடைத்த பணத்தை வைத்து மேற்படி தொகையை கொடுத்தேன் என்று சாட்சி தாமாக கூறுகிறார். பிரதிவாதி தாவா கடனை என்ன காரணத்திற்காக வாங்கினார் என்று பிராதிலும் அறிவிப்பிலும் சொல்லியிருக்கிறீர்களா என்றால் சொல்லியிருக்கிறேன். பிரதிவாதி எனக்கு நெருங்கிய நண்பர் என்று பிராதில் சொல்லியிருக்கும் நிலையில் பிரதிவாதியின் கணவர் பெயர் என்ன என்றால் தெரியாது. அப்பா பெயர் தான் தெரியும். தாவா புரோநோட்டு தொகையை கொடுப்பதற்கு எனக்கு போதிய வசதி இல்லை என்றும் அதனால் வாசாஆ 1க்கு மறுபயன் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 2012 ல் பிரதிவாதிஎன் மனைவியிடம் பூர்த்தி செய்யப்படாத ஒரு புரோநோட்டில் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும் அதில் உள்ள கையெழுத்தை பார்த்து வாசாஆ 1 மோசடியாக தயார் செய்யப்பட்டிருப்பதாகவும் வாசாஆ 1 ல் இருப்பது பிரதிவாதியால் போடப்பட்ட கையெழுத்து இல்லை என்றும் சொல்வது சரியல்ல. எனது ஓய்வூதிய பலன்களை வைத்து மேற்கூறிய தொகையை நான் கொடுத்திருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல. வாசாஆ 1க்கும் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும் சொல்வது சரியல்ல.

மறு விசாரணை இல்லை.